இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"செயற்கை நுண்ணறிவு (Artificial intelligence) யுகத்தில் சிறார்களின் மாண்பைப் பாதுகாக்கும் கொள்கைகளை வடிவமைத்து செயல்படுத்த வேண்டிய பொறுப்பு நாடுகளின் அரசுகளுக்கும், பன்னாட்டு அமைப்புகளுக்கும் உள்ளது" என்று கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.



# செயற்கை நுண்ணறிவு சிறார்களின் மாண்பைப் பாதுகாக்க வேண்டும்!

"செயற்கை நுண்ணறிவு (Artificial intelligence) யுகத்தில் சிறார்களின் மாண்பைப் பாதுகாக்கும் கொள்கைகளை வடிவமைத்து செயல்படுத்த வேண்டிய பொறுப்பு நாடுகளின் அரசுகளுக்கும், பன்னாட்டு அமைப்புகளுக்கும் உள்ளது" என்று கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

"செயற்கை நுண்ணறிவு யுகத்தில் குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரின் மாண்பு" என்ற தலைப்பில் இடம்பெறும் மாநாடு ஒன்றின் பங்கேற்பாளர்களுக்கு வழங்கியுள்ள உரையொன்றில் இவ்வாறு மொழிந்தார் திருத்தந்தை.

செயற்கை நுண்ணறிவு, கல்வி, பொழுதுபோக்கு மற்றும் சிறார்களின் பாதுகாப்பு உள்ளிட்ட நமது அன்றாட வாழ்க்கையின் பல அம்சங்களை மாற்றியமைத்து வருகிறது என்று குறிப்பிட்ட திருத்தந்தை, இதன் பயன்பாடு சிறார்களின் மாண்பு மற்றும் நல்வாழ்வைப் பாதுகாப்பது தொடர்பான முக்கியமான நெறிமுறை கேள்விகளை எழுப்புகிறது என்று தெரிவித்தார்.

குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினர் குறிப்பாக அவர்களின் முடிவுகள் மற்றும் விருப்பங்களை பாதிக்கக்கூடிய செயற்கை நுண்ணறிவு வழிமுறைகள் மூலம் தவறாகப் பயன்படுத்தப்படும் நிலைக்கு ஆளாக நேரிடும் என்றும் எச்சரித்தார்.

பெற்றோர்களும் கல்வியாளர்களும் இந்த இயக்கவியல் தொழிநுட்பம் குறித்து விழிப்புடன் இருப்பதும், தொழில்நுட்பத்துடனான இளைஞர்களின் தொடர்புகளைக் கண்காணித்து வழிநடத்துவதற்கான கருவிகளை உருவாக்குவதும் அவசியம் என்றும் அவர்களுக்கு எடுத்துக்காட்டினார்.

"செயற்கை நுண்ணறிவு யுகத்தில் சிறார்களின் மாண்பைப் பாதுகாக்கும் கொள்கைகளை வடிவமைத்து செயல்படுத்த வேண்டிய பொறுப்பு நாடுகளின் அரசுகளுக்கும், பன்னாட்டு அமைப்புகளுக்கும் உள்ளது" என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களால் ஏற்படும் புதிய சவால்களை எதிர்கொள்ள தற்போதுள்ள தரவு பாதுகாப்பு சட்டங்களைப் புதுப்பிப்பது மற்றும் செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி மற்றும் பயன்பாட்டிற்கான நெறிமுறை தரங்களை மேம்படுத்துவது இதில் அடங்கும் என்றும் குறிப்பிட்டார்.

இருப்பினும், சிறார்களின் மாண்பைப் பாதுகாப்பதை கொள்கைகளுக்குள் மட்டும் அடக்கிவிட முடியாது; அதற்கு எண்மமுறை (டிஜிட்டல்) கல்வியும் தேவைப்படுகிறது என்று உரைத்த திருத்தந்தை, இத்தாலியில் உள்ள மூன்று முக்கிய கத்தோலிக்க அமைப்புகளால் ஊக்குவிக்கப்பட்ட ஒரு பாதுகாப்புத் திட்டம் குறித்து முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிட்டது போன்று, பெரியவர்கள் "கல்வி கைவினைஞர்கள்" என்ற தங்கள் பணியை மீண்டும் கண்டுபிடித்து அதற்கு உண்மையாக இருக்க பாடுபட வேண்டும் என்றும் கேட்டுகொண்டார்.

செல்வாஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# டெல்லி குண்டு வெடிப்பு: தேசிய ஒற்றுமைக்கு ஆயர்கள் அழைப்பு!


குண்டு வெடிப்பு நிகழ்ந்த இடத்தைச் சுற்றி மக்கள் கூட்டம்

நவம்பர் 10, புது டெல்லியில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க செங்கோட்டைக்கு அருகில் நிகழ்ந்த கார் குண்டு வெடித்த சம்பவத்துடன் தொடர்புடைய பல சந்தேக நபர்களை இந்திய காவல்துறை காஷ்மீரில் கைது செய்துள்ளமைக்கு இந்திய ஆயர் பேரவை வரவேற்றுள்ளதாக யூக்கான் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தெற்கு காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் குறைந்தது ஐந்து பேர் கைது செய்யப்பட்ட நிலையில் டெல்லியின் புறநகரில் உள்ள ஃபரிதாபாத்தில் செயல்பட்டு வந்ததாகச் சந்தேகிக்கப்படும் பயங்கரவாதப் பிரிவு ஒன்றையும் காவல்துறை முறியடித்ததோடு அவர்களிடமிருந்து ஆயுதங்களையும், வெடிபொருள் தயாரிக்கும் பொருட்களையும் கைப்பற்றியது எனவும் குறிப்பிட்டுள்ளது.

இந்தியக் கத்தோலிக்க ஆயர் பேரவை உயிரிழந்தவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்ததுடன், மக்களை விழித்திருந்து இறைவேண்டல் செய்யுமாறு வலியுறுத்தியுள்ளது என்பதையும் அந்நிறுவனம் எடுத்துக்காட்டியுள்ளது.

"நாம் அனைவரும் ஒரே சமூகமாக ஒற்றுமையுடன் இருப்போம், அமைதியைப் பேணுவோம், மேலும் அனைத்து மக்களின் பாதுகாப்பையும் நல்வாழ்வையும் உறுதிப்படுத்த ஒத்துழைப்போம் என்றும், நம் நாட்டில் அமைதி நிலவவும் தொடர்ந்து இறைவேண்டல் செய்வோம் என்று இந்தியக் கத்தோலிக்க ஆயர் பேரவை கூறியதையும் சுட்டிக்காட்டியுள்ளதாக அச்செய்தி நிறுவனம்.

ஜான்சி ராணி அருளாந்து

# பங்கு செய்தி





8.11.2025 அன்று குளுவாங் பிரகாசியார் ஆலய, பங்கு மேய்ப்புப் பணி கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டம் ஜொகூர் மலாக்கா மேற்றாசன ஆயர் பெர்னட் போல் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. பங்கு மக்கள் சுமார் 120 பேர் பங்கெடுத்துக கொண்டனர்.

குழு பகிர்வைச் செவிமெடுத்த ஆயர் கூறுகையில் 1965இல் வத்திகான் சங்கமும், அதன் பின் 1976இல் அஜினமெந்த நடைபெற்றது. ஐம்பது ஆண்டுகள் ஆய்வுக்குப்பின் திருஅவையின் மாற்றங்கள் என்பதே மாறாதவை என்பது எல்லாரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொதுவான கருத்து.

அதன்பின் நடைபெறும் சினோட் ஒருங்கிணைந்த பயணம் என்பதையும் விளக்கிக் கூறி திருஅவையின்மாற்றங்கள், இன்றைய பயணத்தைப் பற்றியும் எடுத்துரைத்தார்.

பங்கு குருவானவர மொன்சினியோ பீட்டர் இங் அவர்கள், ஏற்பாட்டு குழுவினர் மற்றும் பங்கு கொண்ட நம்பிக்கையாளர்களுக்கு நன்றி கூற திருப்பலியுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

ஆ.வி.டேவிட். குளுவாங்

# சாட்சி பகிர்வு

சந்தானலெட்சுமி என்னும் நான் மூன்று பெண் பிள்ளைகளுக்கு தாயானவள். எனது வயது 52. மூத்த மகள் திருமணமானவர். எனது வாழ்க்கையில் அன்னை மரியாள் மற்றும் புனித அன்னம்மாள் வழியாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அருளிய குணமளித்தல் அனுபவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். நான் சிறு பிள்ளையாக இருந்த பொழுது குடல் ராதியான நோயினால் பாதிப்புக்குள்ளானேன்.

அத்தருணத்தில் எனது பாட்டி, இந்நோய் நீங்க தான் இறக்கும் வரை மடி பிச்சை எடுப்பதாக புனித அன்னம்மாளிடம் வேண்டிக்கொண்டார். எனது பன்னிரண்டு வயதில் எனது பாட்டி காலமாகிவிட்டார். அதன் பிறகு நீண்ட இடைவெளிக்குப் பிறகு, எனது 52வது வயதில் மீண்டும் எனக்கு வயிற்று வலி ஏற்பட்டது. 8 மாதங்கள் உணவு உட்கொள்ள மிகவும் சிரமப்பட்டு வேதனையுற்றேன். அரசு மருத்துவமனையை நாடினேன். ஆனால் எந்தவொரு பலனுமில்லை. எனது நண்பரின் ஆலோசனையின்படி மருத்துவர் உதவியை நாடினேன். அவர் என்னை பரிசோதனை செய்து, எனது குடல் பகுதியை உடனடியாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார். நானும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன்.

அவ்வேளையில் புனித மிக்கேல் சிற்றாலய அருட்பணியாளர் என்னை சந்தித்து நோயில் பூசுதலும் நற்கருணையும் வழங்கி, எதற்கும் பயப்பட வேண்டாம், "இறைவன் உன்னோடு இருக்கிறார்" என்று ஆசீர் வழங்கினார். அவ்வார்த்தைகள் எனக்கு மிகவும் ஆறுதலாக இருந்தன. அறுவை சிகிச்சை முடிந்து 5 நாட்களுக்குப் பிறகு இல்லம் திரும்பினேன். 2 நாட்களுக்கு பிறகு மீண்டும் கடுமையான வலி ஏற்பட்டு அதே இடத்தில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

நான் பலவீனமாகும் போதெல்லாம் அன்னை மரியா வழியாக மன்றாடுவேன். அதே போன்று எனது கண்களை மூடி ஜெபிக்கும் போது புனித அன்னமாளின் ஆலய கோபுரம் என் கண் முன்னே தோன்றுவதுண்டு. அவ்வேளையில் எனது பாட்டியின் வேண்டுதல் என் நினைவிற்கு வரவே, அதே வேண்டுதலை நிறைவேற்ற முழுமையாக என்னை அர்ப்பணித்தேன். அதன்பின் எனது உடலில் பெறும் மாற்றத்தை என்னால் உணரமுடிந்தது. அப்போதுதான், நாம் முழுமையாக அர்ப்பணித்தாலொழிய நமது ஜெபங்கள், மன்றாட்டுக்கள் கேட்கப்படும் என்பதனையும், இயேசு கிறிஸ்துவின் பாடுகளின் வேதனை எவ்வாறு இருந்திருக்கும் என்பதைனையும் என்னால் ஆழமாக உணர முடிந்தது.

கடந்த ஆகஸ்ட், செப்டம்பர் 2025 (2 மாதங்கள்) போக வேண்டிய எனது உயிர் இன்று உங்களோடு உரையாடிக் கொண்டிருக்கின்றேன் என்றால், எல்லா புகழும் மாட்சியும் அனைத்தும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கே.

# பாத்திமா அன்னை சிற்றால திருவிழா





பேரா, லாரூட் மாத்தாங், செலாமா மாவட்டத்தில் அமைந்துள்ள பாத்திமா அன்னை சிற்றாலயம், தனது 4வது ஆண்டுத் திருவிழாவை அக்டோபர் 19 அன்று மிக மகிழ்ச்சியாகக் கொண்டாடியது. மாலை நேரக் கொண்டாட்டம் செபமாலை, திருப்பலி, பவனி மற்றும் நற்கருணை ஆசீர்வாதத்துடன் தொடங்கியது. இதைத் தொடர்ந்து நடைபெற்ற ஒன்றிப்பு நிகழ்வில் (fellowship gathering), 500க்கும் மேற்பட்ட பங்கு மக்களும், அண்டை பங்குகள் மற்றும் கிளைப்பங்குகளிலிருந்து வந்திருந்த விசுவாசிகளும் கலந்துகொண்டனர்.

திருவிழா நாளின் சிறப்பு நிகழ்வாக, பன்மொழி ஆடம்பரத் திருப்பலி நடைபெற்றது. இத்திருப்பலிக்கு, பினாங்கு, தூய ஆவி பேராலயத்தைச் சேர்ந்த அருட்பணி ரேமண்ட் ராஜ் அவர்கள் தலைமைத் தாங்கினார். தைப்பிங் கத்தோலிக்கத் திருச்சபையின் பங்குத்தந்தையான (Msgr.) அருட்பணி ஸ்டீபன் லியு அவர்கள் இணைந்து திருப்பலி நிறைவேற்றினார்.

தனது மறையுரையில், அருட்பணி ரேமண்ட் அவர்கள், "கிறிஸ்தவப் பயணத்தில் உண்மையான வெற்றி என்பது ஒரே இரவில் கிடைப்பதல்ல, மாறாக அது கடின உழைப்பு, விடாமுயற்சி மற்றும் அசைக்க முடியாத விசுவாசத்தின் மூலமே கிடைக்கிறது" என்று வலியுறுத்தினார். ஆலயத்திற்குத் தவறாமல் வரும் விசுவாசிகளும் (church-going faithful), திருஅவைத் தலைவர்களும் தங்கள் ஆன்மீக வாழ்வில் விடாமுயற்சியுடன் இருக்க அழைக்கப்பட்டுள்ளனர் என்பதை அவர் மக்களுக்கு நினைவூட்டினார். அவர்கள், "ஜெபத்தில் உறுதியாக நிற்கவும், சேவையில் உண்மையாக இருக்கவும், தங்கள் செயல்களின் சாட்சியத்தால் (witness of their actions) மற்றவர்களை வழிநடத்தவும்" வேண்டும் என்றார்.

"ஆலயத்திற்கு வரும் ஒரு விசுவாசி, வாழ்க்கை மிகவும் சவாலானதாக இருக்கும்போதும், நம்பிக்கையைப் பற்றிக்கொண்டு விசுவாசத்தில் விடாமுயற்சியுடன் இருக்க வேண்டும்," என்று அவர் கூறினார்.

"திருஅவைத் தலைவர், பணிவுடனும் இரக்கத்துடனும் வழிநடத்தி, தனது சேவையில் விடாமுயற்சியுடன் இருக்க வேண்டும். மங்கள வார்த்தை (Annunciation) நிகழ்விலிருந்து சிலுவை (Cross) வரை உண்மையாக இருந்த, திருஅவையின் தாயான அன்னை மரியாவின் விடாமுயற்சியை, இவ்விரு சாராரும் பிரதிபலிக்க வேண்டும்." என்றார் அவர்.

## விவிலிய வகுப்பு சான்றிதழ் அளிப்பு விழா






காஜாங், திருக்குடும்ப ஆலயத்தில் நடைபெற்ற 2025ஆம் ஆண்டு 9 மாத விவிலிய வகுப்பில் கலந்து கொண்டோர்க்கு கடந்த 9-11-2015, ஞாயிறன்று, சான்றிதழ்கள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது. தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக ஒவ்வொரு மாதமும் 4வது ஞாயிறுக்கிழமை மாலையில் நடைபெற்ற விவிலிய வகுப்புகளில் சராசரி 60 பேர் கலந்து கொண்டார்கள். இவர்களின் ஈடுபாடோடு தவறாமல் கலந்து கொண்ட 37 பேருக்கு திருக்குடும்ப ஆலய துணை அருட்பணி போனாவெஞ்சர் இராயப்பன் அவர்கள் சான்றிதழ்களை வழங்கினார். மாதந்தோறும் நிகழும் வகுப்புகளைத் திருக்குடும்ப ஆலய திருவிவிலியப் பணிக்குழுவினர் ஏற்று நடத்துகின்றனர்.

குறிப்பிட்ட பாடத்திற்கான படைப்பாளர், இரு மாதத்திற்கு முன்பே பாடத்தைத் தயாரித்து, திருவிவிலியப் பணிக்குழு கூட்டத்தில் சமர்ப்பிப்பர். குழுவினரின் ஆய்வுக்குப் பின், அருட்பணி போனாவெஞ்சரின் கவனத்திற்கு அனுப்பி வைக்கப்படும். பின்னரே, படைப்பாளர் powerpoint உதவியுடன் பாடத்தை நடத்துவர். இவ்வாண்டு சவுல் அரசர், தாவீது அரசர், சாலமோன் அரசர், அரசாட்சி பிரிதல், இறைவாக்கினர்கள் எசாயா, எரேமியா, எசேக்கியல், தானியேல், அந்நிய ஆட்சி முதலியத் தலைப்புகளில் வகுப்புகள் நடத்தப்பட்டன.

சென்ற ஆண்டு (2024) லேவியர், எண்ணிக்கை, இணைச்சட்டம், யோசுவா, நீதித்தலைவர்கள் ஆகிய புத்தகங்கள் மீதான வகுப்பு நடத்தப்பட்டது. 2023ம் ஆண்டு, தொடக்க நூலும், விடுதலைப் பயண நூலும் கற்பிக்கப்பட்டது. ஒவ்வொரு நூலும் 4 பாகங்களாக பிரித்து 8 மாதங்களுக்கு வகுப்புகள் நடத்தப்பட்டன.

அடுத்தாண்டு (2026) பாடத்திட்டத்தில், திருப்பாடல்கள், சீராக், இனிமைமிகு பாடல், யோபு, சாலமோனின் ஞானம் ஆகிய ஞான நூல்கள் இடம் பெற்றுள்ளன. இடைச்செருகலாக ரூத்து புத்தகமும் இடம் பெறும். 2026ஆம் ஆண்டில் வகுப்புகளை மூன்று அருட்தந்தையர்கள் வழிநடத்த ஒப்புக்கொண்டுள்ளனர்.

2024ஆம் ஆண்டு மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமைகளிலும், 2025ஆம் ஆண்டு நான்காவது ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெற்று வந்த விவிலிய வகுப்பு, 2026ஆம் ஆண்டில் மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது. மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை நடைபெறும் வகுப்புக்கு முன்னர் சிற்றுண்டி வழங்கப்படும். ஆர்வமுள்ளோர் இதில் கலந்து கொள்ளலாம்.

அந்தோனி இன்னாசி (திருவிவிலியப் பணிக்குழுச் செயலாளர்)

## கிறிஸ்து அரசர் நம்மை விண்ணகத்திற்கு அழைத்துச் செல்பவர்

நாம், "இயேசு கிறிஸ்துவே அரசர்" என்று மகிழ்ச்சியுடன் பறைசாற்றுகிறோம். ஜனநாயகங்களையும் ஜனாதிபதிகளையும் மதிக்கின்ற நமது நவீன உலகில், இந்த அரச பட்டத்தை முழுமையாகப் புரிந்துகொள்வது கடினமாக இருக்கலாம். கிறிஸ்துவின் ஆட்சி ஒரு பூமிக்குரிய மன்னரின் ஆட்சியைப் போன்றது அல்ல; அவரது அதிகாரம் முழுமையானது, தெய்வீகமானது மற்றும் நித்தியமானது. "பூவுலக அரசர்களுக்குத் தலைவர்" (திருவெளிப்பாடு 1:5) என்று திருவிவிலியம் அவரை அழைக்கும்போது, அது ஒரு முழுமையான உண்மையின் கூற்றாகும். அவர் பல அரசர்களில் ஒருவரல்ல; அவர் படைப்பு அனைத்தின் ஒப்பற்ற, இறையாண்மை கொண்ட ஆண்டவர்; ஏனைய அனைத்து அதிகாரங்களும் அவருக்குக் கட்டுப்பட்டவை. "அரசர்க்கெல்லாம் அரசர், ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவர்" (திருவெளிப்பாடு 19:16) என்பதே அவரது தகுதியான திருப்பெயராகும். நமது விசுவாசத்தின் இந்த மைய மறைபொருளை நாம் ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்து அரசர் பெருவிழாவில் கொண்டாடுகிறோம்.

இந்த அரசபதவி வரலாற்றின் ஒரு தற்செயல் நிகழ்வு அல்ல, மாறாக கடவுளின் மிக ஆழமான வாக்குறுதிகளின் நிறைவேற்றமாகும். கடவுள் தாவீது அரசரோடு ஒரு புனித உடன்படிக்கையை ஏற்படுத்தினார்: "என் முன்பாக உன் வீடும் உன் அரசும் என்றென்றும் நிலைத்திருக்கும்; உன் அரியணை என்றுமே நிலைபெற்றிருக்கும்" (2 சாமுவேல் 7:16) என்று அறிவித்தார். தாவீதின் பூமிக்குரிய அரசாட்சி இறுதியில் வீழ்ச்சியடைந்தாலும், இந்த வாக்குறுதியானது அவரது வம்சாவளியிலிருந்து வரவிருக்கும் ஒரு மேலான, நித்திய அரசரையே சுட்டிக்காட்டியது. தாவீதின் மகனாகிய இயேசு கிறிஸ்துவே இந்த வாக்குறுதியின் வாரிசு ஆவார். அவர் ஒரு அரசியல் எல்லையை நிறுவ வரவில்லை, மாறாக கடவுளின் அரசாட்சியத்தையே தொடங்கி வைக்க வந்தார். அதுவே உண்மை, அருள், நீதி மற்றும் அமைதியின் ஒருபோதும் முடிவடையாத ஆட்சியாகும்.

இந்த அரசரின் தெய்வீக இயல்பு இறைவாக்கினர் தானியேலின் திருக்காட்சியில் வெளிப்படுத்தப்பட்டது. "வானத்து மேகங்களின் மீது மானிட மகன் போன்ற ஒருவர்" கடவுளாகிய "தொன்மை வாய்ந்தவர்" திருமுன் கொண்டுவரப்பட்டதைக் கண்டார். "எல்லா மக்களும், நாடுகளும், மொழியினரும் அவருக்குப் ஊழியம் செய்யுமாறு ஆட்சியுரிமையும், மாட்சியும், அரசும் அவருக்குக் கொடுக்கப்பட்டன. அவரது ஆட்சியுரிமை என்றுமுள்ள ஆட்சியுரிமை" (தானியேல் 7:13-14). இந்த பட்டத்தைத்தான் இயேசு தமக்காகத் துல்லியமாக உரிமை கோரினார். அவர் தலைமைக் குருவின் முன் நின்றபோது, "மானிட மகன் வல்லவராம் கடவுளின் வலப்புறத்தில் வீற்றிருப்பதையும், வானமேகங்கள் மீது வருவதையும் நீங்கள் காண்பீர்கள்" (மத்தேயு 26:64) என்று அறிவித்தார். அவரே தந்தையிடமிருந்து எல்லா மாட்சியையும் அதிகாரத்தையும் பெறும் தெய்வீக மகன்; விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையிலான நிறைவான இணைப்பாளர்.

நாம், இந்த அரசாட்சி ஏற்கனவே நம்மத்தியில் உள்ளது மற்றும் இன்னும் முழுமையாக நிறைவடையவில்லை என்பதைப் புரிந்துகொள்கிறோம். கிறிஸ்துவின் அரசு "நம்மில் வந்துவிட்டது"; அது அவரது மனித அவதாரத்தின் மூலம் பூமியில் தொடங்கி வைக்கப்பட்டது, இப்போது அது அவரது மறைபொருளுடலாகிய திருஅவையில் நம்மத்தியில் உள்ளது. மீட்பளிக்கும் திருமுழுக்கின் வழியாக நாம் இந்த அரசில் நுழைகிறோம், மேலும் பரிசுத்த நற்கருணையில் அரசராம் கிறிஸ்துவாலேயே நாம் பேணி வளர்க்கப்படுகிறோம். இந்த அரசர் எல்லாம் வல்லவர், சர்வ வல்லமையுள்ளவர். திருப்பாடல் ஆசிரியர் கூறுவது போல், "நம் கடவுள் விண்ணுலகில் உள்ளார்; தாம் விரும்புகின்ற யாவற்றையும் அவர் செய்கின்றார்!" (திருப்பாடல் 115:3). அவரது திருவுளம் நிறைவானது, யோபு ஒத்துக்கொண்டது போல, "உம் திட்டங்களில் எதுவும் தடைபடுவதில்லை" (யோபு 42:2).

எனவே, நமது வாழ்வு, அன்பும் எல்லாம் வல்லவருமாகிய இந்த அரசருக்கு நாம் கொடுக்கும் ஒரு பதிலுரையாகும். அவர் தொலைதூரத்தில் இருக்கும் ஒரு ஆட்சியாளர் அல்ல, மாறாக, கிளர்ச்சியாளர்களான தமது படைப்புகளாகிய நம்மை, தம்முடன் ஒப்புரவாகுமாறு அழைக்கும் ஒரு இரக்கமுள்ள மீட்பர். அவர் கருணையுடன் மன்னிப்பையும் மீட்பையும் அளிக்கிறார்; நமது பாவங்களை விட்டுத் திரும்பி, அவர் வழங்கும் நித்திய வாழ்வின் கொடையை ஏற்றுக்கொள்ள நம்மை அழைக்கிறார். கடவுளிடமும் பிறரிடமும் அன்பு செலுத்துவதன் மூலம், அவருடைய அரசின் உண்மையான குடிமக்களாக வாழ நாம் அழைக்கப்பட்டுள்ளோம்; மேலும், தீர்ப்பின் நாளுக்காக மகிழ்ச்சியுடன் காத்திருக்கவும் அழைக்கப்பட்டுள்ளோம். அந்நாளில், நமது அரசர் மாட்சியுடன் திரும்பி வந்து, தீமையை என்றென்றும் தோற்கடித்து, தமது ஆட்சியை வெற்றி வாகை சூடிய, முடிவில்லாத நிறைவுக்குக் கொண்டு வருவார். ஆமென்

- பெர்சியுஸ்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைபெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.